# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.30 (L.W.54)

| | | | |
|---|---|---|---|
| Name | : Dr.A.Sendhilkumar | Caste | : BC |
| Father's Name | : R.Arunachalam | Calling | : Doctor |
| Village | : Katpadi | Religion | : Indian |
| Taluk | : Katpadi | Age | : 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.02.2025.

(A1 to A6 present)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் 02.20 P.M.**

நான் தற்போது வேலூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவனையில் எலும்பு முறிவு பிரிவில் இணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.06.2015 அன்று எலும்பு முறிவு பிரிவல் பணிபுரியும்போது விபத்து காய சிகிச்சை பிரிவு பகுதியில் அனுமதிக்கப்பட்ட ஷமீல் பாஷா 26 வயது ஆண் என்பவரை நேரில் பரிசோதனை செய்தேன்.

ஏற்கனவே எலும்பு முறிவு துறை மருத்துவர் சேரலாதன் 24.06.2015 அன்று இந்த நோயாளியை பார்வையிட்டு அவருக்கு வலது கையில் பிரேகியல் பிளக்ஸிஸ் நரம்பு பாதிப்பு என்று குறிப்பிட்டிருந்தார். மருத்துவர் சேரலாதன் என்னுடன் பணிபுரிபவர்.

25.06.2015 அன்று ஷமீல் பாஷா 26 வயது என்பவரை பரிசோதனை செய்து அவருக்கு வலது பிரேகியல் நரம்பு பாதிப்பு இருப்பதாக கண்டறிந்தேன். எக்ஸ்ரே சர்வைகல் ஸ்பைன் பார்வையிட்டதில் எலும்பு முறிவு எதுவும் இல்லை என்று கண்டறிந்தேன்.

மேல் சிகிச்சைக்காக நரம்பியல் அறுவை சிகிச்சை பிரிவு மற்றும் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை பிரிவு அரசு பொது மருத்துவமனை சென்னைக்கு பரிந்துரை செய்தேன். 30.07.2015 அன்று சிபிசிஐடி போலீசார் என்னை நேரில் மருத்துவமனையில் சந்தித்து விசாரணை நடத்தினார்கள்.

நான் பதிந்த விவரங்கள் ஏற்கனவே அ.சா.28 மூலமாக குறியீடு செய்யப்பட்டு அ.த.சா.ஆ.51–ல் உள்ளது. அத.சா.ஆ.51–ல் முதல் தாளில் பின் பக்கத்தில் நோயாளியின் நோய் பற்றிய விவரம் குறித்து அதில் நான் குறித்துள்ளேன், கையெழுத்து போட்டுள்ளேன். எனக்கு பிறகு வேறு மருத்துவர் சிகிச்சை அளித்துள்ளார். எனக்கு முன்பாகவும் வேறு மருத்துவர் நோயாளிக்கு சிகிச்சை அளித்துள்ளார். சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

கு.வி.மு.ச. பிரிவு 161 வாக்குமூலத்தை போலீசார் கையால் எழுதிக்கொண்டார்கள் நான் அதில் கையெழுத்து போடவில்லை. 30.07.2015 அன்று சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தபோது நான் அசல் ஆவணங்களை பார்த்துதான் வாக்குமூலத்தில் கையெழுத்து போட்டேன்.

கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில், நான் அசல் ஆவணங்களை பார்த்துதான் கொடுத்தேன் என இல்லை என்றால் சரிதான். மருத்துவர் சேரலாதனை பற்றி நான் என்னுடைய கு.வி.மு.ச. பிரிவு 161 வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

என்னுடைய முதல் விசாரணையில் மருத்துவர் சேரலாதன் பிரேகியல் பிளக்ஸஸ் நரம்பியல் பாதிப்பு குறித்து கூறியிருந்தார் என்ற தகவலை கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். 25.06.2015 அன்று இன்ஜூரியை பிரேகியல் நரம்பு பாதிப்பு இருப்பதாக கண்டறிந்தேன் என்ற சொற்றொடர் கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

அ.த.சா.ஆ.51–ல் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை பிரிவு என்ற சொற்றொடர் கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் நான் கூறவில்லை என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணையில எதையெல்லாம் கூறவில்லையோ அதை எல்லாம் எனது முதல் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றாலும் எனது அரசு தரப்பு வழக்கறிஞர் சொல்லி கொடுத்ததை நான் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

Case sheet எழுதும்போது ஒரு பக்கம் எழுதி முடிந்த பிறகு மீண்டும் திருப்பி அதே வடிவில் மேலிருந்து கீழாக எழுதினேன் என்றால் சரிதான். அ.த.சா.ஆ.51–ல் முதல் பக்கத்தில் நேராக எழுதப்பட்டுள்ளது ஆனால் அதன் பின்பக்கம் தலைகீழாக இருக்கிறது என்றால் சரிதான்.

அசல் ஆவணங்களை எடுத்து ஒளித்து வைத்துவிட்டு முறைப்படி எழுதாமல் அவரசத்தில் தலைகீழாக எழுதி ஒரு பொய்யான ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.51–ல் முதல்தாளின் இரண்டாவது பக்கத்தில் தலைகீழாக உள்ள பக்கத்தில் மேலிருந்து 5 வரிகள் என்னால் எழுதப்பட்டவை. மேற்கண்ட அந்த 5 வரிகளை வழக்கிற்காக பின்னிட்டு நான் எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல.

அ.த.சா.ஆ.51–ல் நான் எழுதியிருக்கும் இடத்தில் ஏற்கனவே 26.06.2015 என்று எழுதி பின்னர் 25.06.2015 என திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அ.த.சா.ஆ.51–ல் நான் எழுதியிருப்பதற்கு கீழ் உள்ள தேதி 20.06.2015 என்றால் 25.06.2015 தான். நான் எழுதிய 5 வரிகளுக்கு கீழே எனது சுருக்கொப்பமிட்டு தேதி எதுதப்படவில்லை என்றால் சரிதான்.

30.07.2015 காவல் துறையினர் என்னை விசாரிக்கும்போது நான் பிரேகியல் பிளக்ஸிஸ் இன்ஜிரி என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 30.07.2015–க்கு பின்னிட்டு இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.51–ல் நான் எழுதிய தாளிற்கு வரிசை எண் உள்ளதா என்றால் இல்லை. வழக்கு தொடர்பாக என்னை போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அசல் ஆவணங்களை மறைத்து வைத்துவிட்டு காயங்களை குறித்து இந்நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்த நோயாளி தொடர்பான குற்றவியல் வழக்கு நிலுவையில் இருப்பது தெரிந்தால் அந்த நோயாளி தொடர்பான அசல் ஆவணங்கள் அனைத்தையும் வழக்கு முடியும் வரை பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்பது முறை என்றால் சரிதான்.

"As per the medico legal subject the original documents related to the criminal case for the treatment given to the patient is to be retained intact till the completion of the criminal case" என்றால் சரிதான். எங்கள் மருத்துவமனையில் அசல் ஆவணங்கள் அனைத்தையும் மறைத்து வைத்துவிட்டு நகல் எடுத்து அதில் பொய்யான தகவல்களை எழுதி இந்த நீதிமன்றத்தில சமர்ப்பித்திருக்கிறார்கள் என்றால் சரியல்ல.

அ.த.சா.ஆ.51–ல் எந்த இடத்திலும் true copy என்று எழுதவில்லை என்றால் சரிதான். 25.06.2015 அன்ற அசல் ஆவணங்கள் இருந்தது. 30.07.2015 அன்று அசல் ஆவணங்கள் இருந்தது. நான் அசல் ஆவணங்களை மருத்துவ அதிகாரியிடம் கேட்டபோது 2016 வரையுள்ள அசல் ஆவணங்கள் 2023 ஆண்டு அழிக்கப்பட்டதாக தெரிவித்தார். அந்த ஆவணங்களை அழித்தது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. அழிக்கப்பட்ட அசல் ஆவணங்கள் ஒரு register–ல் எழுதி அது மருத்துவமனையின் தலைவரால் அங்கீகரிக்கப்பட்டு அதன் பிறகுதான் அதை அழிப்பார்கள் என்றால் சரிதான்.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5ம் மற்றும் 6ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். அனுமதியுடன் தொடர் குறுக்கு விசாரணை.

நான் என்னுடைய கு.வி.மு.ச. பிரிவு 161 வாக்குமூலத்திற்கும் என்னடை முதல் விசாரணைக்கம் முரண்பாடு உள்ளது என்றால் இல்லை. என்னுடைய முதல் விசாரணையில் மருத்துவர் சேரலாதன் நோயாளிக்கு பிரேகியல் நரம்பியல் பாதிப்பு என்று குறிப்பிட்டிருப்பது case sheet–ல் உள்ளது.

சிபிசிஐடி போலீசார் முன்பு மருத்துவர் சேரலாதன் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர ரம்யா நோயாளியை பார்வயைிட்டடள்ளார். மருத்துவர் சேரலாதன் மற்றும் ரம்யா இருவரும் எழுதியுள்ளார்கள் அவ்வாறு எழுதவில்லை என்றால் சரியல்ல. மருத்துவர் சேரலாதன் முந்தைய நாளில் பணியில் இருந்தார்.

மருத்துவர் சேரலாதன் 25.06.2015 அன்று பணியில் இல்லை 24.06.2015 அன்றுதான் பணியில் இருந்தார். நோயாளியை நான் பரிசோதித்தபோது முந்தைய தின பதிவுகளை பார்த்தும் case sheet–ஐ பார்த்தும் சிகிச்சை அளித்தேன். சிடிஸ்கேன் பார்க்கவில்லை. நரம்பியல் தொடர்பான பாதிப்புகளை நான் நோயாளியை பரிசோதனை செய்து தெரிந்து கொண்டேன்.

நான் ஆர்த்தோ மருத்துவர், நரம்பியல் தொடர்பானவற்றை நரம்பியல் மருத்துவர்தான் சொல்ல முடியும் என்றால் சரிதான். நான் எலும்பு முறிவு மருத்துவர் என்பதால், நரம்பு தொடர்பான காயங்கள்

குறித்து சொல்வதற்கான அருகதை இல்லை என்றால் சரியல்ல. நரம்பியல் குறித்த தெளிவான செய்திகளை நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் தான் சொல்ல முடியும் என்றால் சரிதான்.

சாதாரண வீக்கம் (contusion) என்பது கதவு மற்றும் வேறு இடங்களில் இடித்துக்கொண்டால் கூட ஏற்படும் என்றால் சரிதான். சாதாரண வீக்கமும் அவ்வாறுதான் ஏற்படும் என்றால் சரிதான். ஏஆர் பதிவை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நோயாளியை இராஜிவ் காந்தி பொது மருத்துவமனைக்கு பரிந்துரைத்த நரம்பியல் மருத்துவர் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

நரம்பியல் மருத்துவருக்கு மருத்துவர் ரம்யா பரிந்துரைத்தார். நான் காயங்கள் குறித்த ஆவணங்கள் அனைத்தையும் சிபிசிஐடி போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. சிபிசிஐடி போலீசார் தாயர் செய்த ஆவணங்களில் நான் கையெழுத்திட்டேன் என்றால் சரியல்ல. நானும் மற்ற மருத்துவர்களும் திட்டமிட்ட ஆவணங்களை தயாரித்தோம் என்றால் சரியல்ல. அனைத்து ஆவணங்களிலும் தேதி மற்றும் விவரங்கள் மாறுபட்டிருப்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இந்நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 03.30 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.04 18:31:52 +0530